**செய்தி வெளியீடு எண்: 156** **நாள் : 14.04.2015**

**அகில இந்திய குடிமைப்பணித் தேர்வு பயிற்சி மையம், சென்னை–28**

**பத்திரிகைச் செய்தி**

தமிழக அரசால் இயங்கி வரும் சென்னை பி.எஸ். குமாரசாமி ராஜா சாலை காஞ்சி வளாகத்தில் உள்ள, அகில இந்திய குடிமைப்பணித் தேர்வு பயிற்சி மையத்தால் மத்திய தேர்வாணைக் குழுவால் நடத்தப்படும் (UPSC) அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வுக்கு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. இந்த தேர்வில் தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்களின் தேர்ச்சி எண்ணிக்கையை அதிகப்படுத்தி அவர்களை இந்திய குடிமைப் பணிகளை ஏற்கும் விதத்தில் செயல்படுவதே, இப்பயிற்சிமையத்தின் நோக்கமாகும். இப்பயிற்சி மையம் அண்ணா மேலாண்மை நிலைய இயக்குநர் மற்றும் பயிற்சித்துறை தலைவர் அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது.

இந்த பயிற்சி மையத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியவர்களுக்கு, தங்குமிடம், உணவு, நூலகம் மற்றும் கணினி வசதிகளுடன் கூடிய சீரிய பயிற்சியினை ஒரே கூரையின் கீழ் அளித்திடும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 325 (225 முழு நேரம் + 100 பகுதி நேரம்) மாணவ/மாணவியர்களுக்கு ஒவ்வொரு வருடமும் மத்திய தேர்வாணையத்தினரால் நடத்தப்படும் அகில இந்திய குடிமைப்பணிகளுக்கான முதல் நிலை தேர்வுக்கான பயிற்சியும் மற்றும் 225 மாணவ/மாணவியருக்கு முதன்மைத் தேர்வுகளுக்கு பயிற்சி மற்றும் மாதிரி ஆளுமைத் தேர்வு பயிற்சி என மூன்று நிலைகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

2014–ம் ஆண்டிற்கான மத்திய தேர்வாணையத்தின் முதன்மை தேர்வுகள் கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்றது. இந்த தேர்விற்கான முடிவுகள் மத்திய தேர்வாணையக் குழுவால் 12/04/2015அன்று வெளியிடப்பட்டது. இந்த பயிற்சி மையத்தில் பயின்ற மாணவ/மாணவியர்களில் 65 மாணவ/மாணவியர்கள் முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்றார்கள் எனவும், அதில் ஆண்கள் 46 பேர்கள் மற்றும் பெண்கள் 19 பேர்கள் என அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மைய முதல்வர் தெரிவித்துள்ளார்.

முதன்மை தேர்வில் தேர்ச்சி பெற்ற தமிழகத்தைச் சார்ந்த மாணவ/மாணவியர்கள் அனைவரும் இப்பயிற்சி மையம் நடத்தவிருக்கும் மாதிரி ஆளுமைத் தேர்விற்கு சேர்த்துக் கொள்ளப்படுவர். இப்பயிற்சி மையத்தில் பயின்றவர்கள் தவிர இதர பயிற்சி மையத்தில் பயின்ற மாணவ/மாணவியர்களும், எந்த பயிற்சி மையத்திலும் சேராமல் தனியே தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றவர்களும் பயிற்சிக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர். மாணவ/மாணவியர்கள் மாதிரி ஆளுமைத் தேர்வுக்கான விண்ணப்பப்படிவத்தை 15.04.15 முதல் 18.04.15 வரை இப்பயிற்சி மைய அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். தகுதி பெற்ற மாணாக்கர்கள் இப்பயிற்சி மையத்தின் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், மூன்று புகைப்படம் (Pass Port Size), முதன்மைத் தேர்வுக்கு விண்ணப்பித்த விண்ணப்ப நகல் (DAF) ஆகியவற்றை சமர்ப்பித்து தங்களது பெயரை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மத்திய தேர்வாணையம் நடத்தும் நேர்காணலை தன்னம்பிக்கையுடன் எதிர்கொள்ளும் வகையில் தகுதி பெற்ற மாணவ/மாணவியர்களுக்கு பயிற்சி அளிக்கும் பொருட்டு, இப்பயிற்சி மையத்தில் கீழ்கண்டவாறு ஏற்பாடுகள் இப்பயிற்சி மைய நிர்வாகத்தால் செய்யப்பட்டு வருகிறது.

1. மூத்த இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி அலுவலகர்களையும், கல்லூரிகளின் பேராசிரியர்களையும் கொண்ட குழு அமைக்கப்பட்டு, மாதிரி ஆளுமைத் தேர்வும், சிறப்பு வகுப்புகளும், நடத்தப்படுகிறது. மாதிரி ஆளுமைத் தேர்வு நடத்தப்படும் நாட்கள் 23.04.15, 24.04.15 மற்றும் 25.04.15 (மூன்று நாட்கள்)

2. பத்து நாட்கள், தமிழ் நாடு இல்லத்தில் தங்கி ஆளுமைத் தேர்வில் கலந்து கொள்ள தமிழக அரசின் மூலம் ஏற்பாடுகள் செய்யப்படுகிறது.

3. ஆளுமைத் தேர்வுக்கு, புது டெல்லி செல்லும் மாணவ/மாணவியர்களுக்கு பயணப்படியாக தமிழக அரசால் ரூ.2000/- வழங்கப்படுகிறது.

மேலும் விவரங்கள், இப்பயிற்சி மைய இணைய தளத்தில் www.civilservicecoaching.com வெளியிடப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி முதல்வர், அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையைம், சென்னை – 28. தொலை பேசி எண் 044-24621475

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**